விக்கியும் நானும் இப்போ நான் கனடாவின் ஒட்டவா நகரில், எங்கள் வீடு அமைந்திருக்கும் எல்கின் வீதியிலிருந்து சிட்டி ஹால் நோக்கி சென்றுகொண்டிருக்கிறோம்... கனடாவிற்கு வந்து மூன்று வருடங்கள் ஆகிடுச்சு... இதுவரை எங்க ரெண்டுபேருக்கும் இடையில் வேறு யாரும் வந்துவிடவில்லை... இன்றைக்கு மூன்றாம் நபர் எங்கள் வாழ்க்கைக்குள் நுழைய இருக்கிறார்... பொதுவா எங்க வாழ்க்கைல எங்க ரெண்டு பேரை தவிர, மூன்றாவதா ஒரு ஆள் வருவதை எங்க ரெண்டு பேராலயும் எப்பவும் ஏத்துக்க முடியாது.... ஆனால், இப்போ எங்கள் விருப்பத்தோடு, இருவர் இப்போ மூவராக போறோம்...

இரண்டு மாதங்களுக்கு முன்பு ஒருநாள், விக்கிக்கு குழந்தை என்றால் அவ்வளவு பிரியம் என்பதை பார்க் போயிருக்கும்போது அறிந்தேன்.... அன்று அவன் பிறந்தநாள்... வழக்கமாக கொடுக்கும் பிறந்தநாள் பரிசு போல இல்லாமல், அந்த பிறந்தநாள் அவன் வாழ்க்கையில் மறக்க முடியாத நாளாக இருக்கவேண்டும் என்று முடிவு செய்தேன்... பன்னிரண்டு மணிக்கு, அவனை எழுப்பிய நான் அவனிடம் ஒரு கோப்பை நீட்டினேன்....

“என்னடா இது?” என்றான்...

“பர்த்டே கிப்ட்...”

“என்னது?”

“பிரிச்சு பாரு”

அது குழந்தையை தத்தெடுப்பதற்கான பார்மாலிட்டிஸ் அடங்கிய கோப்பு... ஒவ்வொரு வரியாக அவன் அந்த கோப்புகளை படிக்கும்போது அவன் முகமாற்றத்தை அணு அணுவாக நான் ரசித்தேன்... முதலில் எதிர்பார்ப்பில் உயர்ந்த அவன் புருவங்கள், அதனை தொடர்ந்து ஆச்சரியத்தில் விரிந்த அவன் கண்கள், மகிழ்ச்சியில் மெல்ல மெலிதாக அரும்பிய அவன் புன்னகை, இறுதியாக அதை படித்து முடிக்கும்போது அவன் கண்களில் மெல்ல அரும்பிய கண்ணீர் துளி... அப்பப்பா!!!!.... நவரசத்தையும் கலந்த ஒரு அறுசுவை விருந்தை சுவைத்த பெருமிதத்தில் நான் அவற்றை எல்லாம் கண்டு ரசித்தேன்...

தாவி எழுந்து என்னை கட்டிப்பிடித்து, என் கன்னம் சிவக்கும் அளவிற்கு முத்தங்களால் நிறைத்தான்.... ரொம்ப உணர்ச்சி மிகுதியில் காணப்பட்ட அவனை கொஞ்சம் ஆசுவாசப்படுத்தி, அருகில் அமரவைத்தேன்....

“எப்போடா பண்ணின இதல்லாம்?”

“அன்னிக்கு பார்க் போனோம்ல, அப்போதான் தோனுச்சு”

“இது எனக்கு தோணவே இல்லையேடா... நான் இன்னும் நம்ம ஊர்ல இருக்குற நினைப்புலையே இருந்திட்டேன்.... இன்னும் நமக்கு கே மேரேஜ் அபீசியலா நடக்கலையே?.. அப்புறம் எப்டி?”

“அது ஒன்னும் ப்ராப்ளம் இல்ல.... இங்க தனியாள் கூட குழந்தைகள அடாப்ட் பண்ணிக்கலாம்... இப்போ போய் குழந்தைய செலக்ட் பண்ணிக்கலாம், அந்த குழந்தை தலைமைல நாம கல்யாணம் பண்ணிக்கலாம்.. நாளைக்கு ஒரு ப்ரைவேட் ஏஜன்சி’ல குழந்தைகள பார்க்க போறோம்..... ஓகே தானே?...” என்று நான் சொல்லி முடிக்கும்போது, என் கைகளை இறுக்கி பிடித்தான் அவன்...

“ஐயோ... என்னால சந்தோஷத்த தாங்க முடியலடா.... விடியுற வரைக்கும் எனக்கு நிச்சயம் தூக்கம் வராது... நாளைக்கு போய் குழந்தைகள பார்க்குற வரைக்கும், எனக்கு கையும் ஓடாது, காலும் ஓடாது.... சரி, என்ன குழந்தை அடாப்ட் பண்ணலாம்?, எப்போ குழந்தை வீட்டுக்கு வரும்?, நான் வேணும்னா ஜாப் விட்றவா?” அவன் என்னென்னமோ யோசிக்க தொடங்கிவிட்டான்....

“டேய் பொறுமையா இரு முதல்ல.... நாளைக்கு போய் குழந்தை பார்க்குற வரைக்கும் உன்னோட கற்பனைகள கொஞ்சம் அளவோட வச்சுக்க” அவனை பிடித்து வலுக்கட்டாயமாக படுக்கையில் படுக்க வைத்தேன்....

“வாய மூடிட்டு பேசாம தூங்கு, காலைல பாத்துக்கலாம்” சொல்லிவிட்டு அவன் மீது போர்வையை எடுத்து போர்த்தினேன்.... அவன் நான் பேசுவதை கவனித்ததாக தெரியவில்லை.. வழக்கமான குழந்தை சிந்தனைக்கு ஓடிவிட்டான்... ஓடி சென்று லேப்டாப்பை எடுத்து, குழந்தைக்கு பெயர் வைக்க பல வலைதலங்களையும் தேடத்தொடங்கிவிட்டான்.... அவனை பார்த்துக்கொண்டு இருந்தால், அடுத்தநாள் என் பிழைப்பு ஓடாது என்று கருதி நான் தூங்க தொடங்கினேன்....

என் மொபைல் அலாரம் அடிக்கும் முன்பே என்னை விக்கி எழுப்புகிறான்...

“டேய் எழுந்திரு... லேட் ஆச்சு... வா போகலாம்” என்றான்...

வழக்கமாக அடிக்கும் அலாரம் அடிக்கவில்லை போலும் என்று நினைத்து அலைபேசியின் திரையை பார்த்த எனக்கு விக்கி மீது கோபம்தான் வந்தது... நேரம் இப்போது அதிகாலை ஐந்து மணி.... வெளியில் கும்மிருட்டு, பனிப்பொழிவால் தெருக்களில் திருடர்கள் கூட நடமாடாத சூழலில் என்னை எழுப்புகிறான்... அவனோ குளித்து முடித்து, சுத்த பத்தமாக கிளம்பி அமர்ந்திருக்கிறான்...

“டேய் பாவி... மணி இப்போ அஞ்சு.... அந்த ஆபிஸ் திறக்குற நேரமே காலை பத்து மணிதான்.... நாம போயி அங்க என்ன திருடவா போறோம்?” என்றேன்....

அவன் என்னை விடுவதாக இல்லை... வலுக்கட்டாயமாக என்னை எழுப்பி கிளம்ப வைக்கிறான்...

ஒருவாறாக குறிப்பிட்ட ப்ரைவேட் ஏஜென்சியை நாங்கள் அடையும்போது சரியாக மணி பத்து... மதியம் வரை பல இடங்களுக்கும் சென்று குழந்தைகளை பார்த்து வந்தோம், எங்களுக்கென்று குழந்தை பற்றி பெரிய எதிர்பார்ப்புகள் இல்லை... நான்காவது இடத்துக்கு நாங்கள் குழந்தையை காண சென்ற இடத்தில் எங்களிருவர் கண்களும் அந்த "கருப்பி" மீது பட்டது... அந்த குழந்தை அவ்வளவாக கருப்பில்லை என்றாலும் கூட, மற்ற "வெளிர் மஞ்சள்" குழந்தைகளுக்கு மத்தியில் அது கருப்பாகவே தோன்றியது.... அந்த குழந்தைக்கு ஒன்றரை வயது இருக்கலாம், ஆணா? பெண்ணா? என்பது இப்போவரை தெரியவில்லை... பெண் குழந்தையாக இருந்தால் இன்னும் உத்தமம் என்று மனம் எதிர்பார்த்தது...

பார்த்தவுடன் மனதில் பதிந்த அந்த குழந்தையின் சிரிப்பில் நானே சிறிதுநேரம் என்னை மறந்தேன்... இந்த குழந்தையைதான் தத்தெடுக்க வேண்டும் என்ற முடிவோடு நான் விக்கியை நோக்க, அவனோ "டேய் அந்த குழந்தை எனக்கு ரொம்ப பிடிச்சிருக்கு... அதையே அடாப்ட் பண்ணிக்கலாம்" என்று என் எண்ணங்களை அப்படியே பிரதிபலித்தான்...

"நானும் அதைத்தாண்டா உன்கிட்ட சொல்லலாம்னு இருந்தேன்" என்று அவனிடம் சொல்ல, அருகில் இருந்த நிறுவன நண்பர், "அது பெண் குழந்தை சார், இலங்கை தமிழ் பொண்ணுக்கு பிரசிவித்த குழந்தை அது... பார்மாலிட்டிஸ் முடிச்சிடலாமா?" என்றார்....

எனக்கோ அளவில்லா மகிழ்ச்சி.... நான் அந்த குழந்தையை பற்றிய மேலும் பல விபரங்களை கேட்டுக்கொண்டிருக்க, எதையும் கண்டுகொள்ளாமல் அந்த குழந்தையை தூக்கி கொஞ்ச தொடங்கிவிட்டான் விக்கி....

இரண்டு மாதங்கள் முழுதாக பலகட்ட விசாரிப்புகள், கேள்விகள், உத்திரவாதங்கள், அங்கீகரிப்புகள் என்று தினந்தோறும் குழந்தை தத்தெடுப்பு தொடர்பாக பலகட்ட பார்மாலிட்டிஸ்'கள் நடந்தேறின.... அந்த நாட்களிலும் மறக்காமல் குழந்தையை சென்று தினமும் பார்த்து வருவோம் இருவரும்...

பெண் குழந்தை என்று முடிவாயிற்று.... சும்மா இருப்பானா விக்கி???.... ஒன்றரை வயது குழந்தைக்கு நூற்றுக்கணக்கான ஆடைகள், விளையாட்டு பொம்மைகள் என்று வாங்கி குவிக்க தொடங்கிவிட்டான்.... ஒவ்வொருநாளும் குழந்தை பற்றிய பேச்சுதான் எங்கள் இருவரையும் அதிகமாக ஆக்கிரமித்தது... இரண்டு பெயர்கள் இறுதிகட்ட பரிசீலனையில் இருந்தது... நிச்சயம் தமிழ் பெயர்தான் என்பதில் இருவரும் உறுதியாக இருந்ததால் "யாழினி, அமுதா" என்ற இரண்டு பெயர்களும் இறுதிகட்ட பரிசீலனையில் இருந்தது...

"அமுதா நல்ல பேர்தானே?.. அதையே வச்சுக்கலாம்டா" என்றான்....

"அது பழைய பேர் மாதிரி இருக்குடா...."

"யாலினி கூட அப்டிதானே?"

“அது யாலினி இல்ல, யாழினி”

“அதனாலதான் சொல்றேன்.... எனக்கு அந்த பெயரை ஒழுங்கா உச்சரிக்க வராதுடா..”

“அதனால என்ன?... போகப்போக சரி ஆகிடும்”

“வேணாம்டா... அவ வளரும்போது ‘உனக்கு என் பேரை கூட சரியா உச்சரிக்க தெரியல’னு கிண்டல் பண்ணுவா” பாவமாக கூறினான்...

“ஒன்னும் ப்ராப்ளம் இல்ல.... தினமும் ‘ஏழை கிழவன் வாழைப்பழ தோல் வழுக்கி கீழே விழுந்தான்’னு சொல்லி ப்ராக்டிஸ் பண்ணு, கொஞ்ச நாள்ல சரியா வந்திடும்”

இதை சொன்ன நாள்முதலாக ஒருநாளைக்கு இந்த பயிற்சியை பத்து முறைக்கு மேல் செய்ய தொடங்கினான்.... மனதிற்குள் சிரித்துக்கொண்டேன்....

எல்லா வழக்கங்களும் முடிந்து இன்று குழந்தை எங்கள் கைக்கு வரும் நாள், அதுமட்டுமல்ல எங்கள் திருமணம் கூட இன்றுதான்.... அந்த யாழினி குட்டிதான் எங்க வாழ்க்கையில் வரப்போற மூன்றாவது நபர்.... வாழ்வில் வரப்போற வசந்தகால தேவதை....

சிட்டி ஹாலுக்கு அதற்குதான் இப்போ போய்கிட்டு இருக்கோம், எங்க யாழினி குட்டி இந்நேரம் அங்க வந்திருப்பா.... எங்களிருவர் வாழ்க்கைக்குள்ளும் நுழையப்போகும் மூன்றாம் நபர் அவள்தான்... அவளை மூன்றாம் நபர் என்று சொல்லக்கூடாது, எங்களிருவருக்குள் ஒருத்தி தான் யாழினி... எங்கள் வாழ்க்கைக்கான புது அர்த்தத்தை, நாங்கள் வாழ்வதற்கான புது வாழ்க்கையை அவள்மூலம் பெற்றுள்ளோம்... எங்கள் வாழ்வின் சலனங்களை குறைத்து, இன்பங்களை நிறைக்க வந்த தேவதை அவள்....

என் பக்கத்தில் உட்கார்ந்திருக்கும் விக்கி, ,மெல்ல “வாழைப்பழம்” பயிற்சியில் ஈடுபட்டுக்கொண்டிருக்கிறான்..... சிட்டி ஹாலுக்கு முன்பு வண்டி நிற்க, குழந்தையை கையில் வைத்தபடி நின்றார் நிறுவன நண்பர்.... எங்கள் இருவரையும் பார்த்து உற்சாகத்தில் துள்ளி குதிக்கிறாள்... தினமும் எங்களோடு அவள் விளையாடுவதை அவள் ரொம்பவே ரசிப்பாள்... விக்கியிடம் இன்னும் அதிக பாசத்தோடு இருப்பாள்... அவனை பார்த்தாலே தூக்க சொல்லி கைகளை உயர்த்துவாள்....

குழந்தை மீது பாசமும், அன்பும் மட்டும் இருந்தால் போதுமா?.. எப்படி தூக்க வேண்டும்? என்று கூட அவனுக்கு தெரியவில்லை... அதை அவனுக்கு கற்றுக்கொடுக்கவே இரண்டு நாள் ஆனது... இடது மார்போடு சேர்த்து பிடித்து, ஒரு கையை குழந்தையின் இடுப்பிலும், இன்னொரு கையை அவள் முதுகிலும் வைத்தவாறு தூக்க வேண்டும் என்று பாடம் நடத்தினேன்....

இப்போதும் விக்கியை தூக்க சொல்லி கையை நீட்டவே, அவனும் உற்சாகத்தில் “யாழினி குட்டி, எப்டி இருக்க?” என்று சொல்லி குழந்தையை தூக்கினான்...

*எனக்கு ஆச்சரியம்... அவன் பெயரை ஒப்புக்கொண்டதால் அல்ல, அதை சரியாக உச்ச்சரித்ததால்.....*

*“என்ன சொன்ன?” ஆச்சரியமாக கேட்டேன்....*

*“புரியலையா?... யாழினி குட்டி’னு சொன்னேன்.... ஏழை கிழவன், வாழைப்பழ தோல் வழுக்கி கீழே விழுந்தான்.... போதுமா?” அச்சு பிசறாமல் அப்படியே கூறினான்...*

*எங்கள் வீட்டு தேவதை வந்த முதல்நாளே அவனுடைய உச்சரிப்பை மாற்றிவிட்டாள்.... பின்னர் இருவரும் மோதிரங்கள் மாற்றிக்கொண்டு, திருமண ஒப்பந்தத்தில் கையெழுத்து இட்டோம்... திருமணம் முடிந்த கையேடு எனக்கு அவன் முத்தம் கொடுக்க, அதைப்பார்த்த யாழினி ஏனோ அழத்தொடங்கினாள்.... அதை பார்த்த விக்கி, பதறிப்போய் ஓடி யாழினியை தூக்கி கொஞ்ச தொடங்கினான்....*

*அழுகை நிறுத்தி சமாதானமான, அவளுடைய கண்ணீரை துடைத்த கன்னத்தில் முத்தங்களை பரிமாறினான் விக்கி... யாழினி அழுததும் பதறிய விக்கியை கண்டபோது, குழந்தை யாழினியா? விக்கியா? என்பதை புரியாமல் ரசித்து சிரித்தபடி பார்த்துக்கொண்டு இருக்கிறேன்.... என்னை அறியாமல் என் கண்களில் மகிழ்ச்சி பெருக்கால் கண்ணீர் திரண்டு வழிந்தோடியது.... (முற்றும்)*